Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2014

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Father/Husband Name | : அழகர்சாமி |
| Age | : | Calling | : |
| Date | : 17.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 17day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலூர் அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 12.02.2005 ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது காலை 11.15 மணிக்கு 19 வயதுள்ள பிரதிவிராஜ் என்பவர் தன்னை தெரியாத 10 நபர்கள் கத்தியாலும், கம்பாலும் 11.00 மணிக்கு கல்லூரி வளாகத்திற்குள் அடித்ததாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு உடம்பில் வலி இருப்பதாகவும், 5 செமீx 0.5 செமீ சிறிய வெட்டு காயம் அவரது வலது முன் கையில் இருந்தது. அதே அளவில் சிறிய வெட்டு காயம் அவரது இடது முன் கையிலும் இருந்தது. சிறிய சிராய்பு காயங்கள் வலது கையில் இருந்தது. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அந்த பிரதிவிராஜ்க்கு வழங்கிய காயசான்று அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

அவருடன் சேர்ந்து 18 வயதுள்ள சுந்தரபாண்டியை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவருக்கு

சிகிச்சை அளித்தும் அதில் அவருக்கு 5x 0.5 செமீ சிறிய வெட்டு காயம் வலது முன் கையிலும், அதே அளவுள்ள மற்றொரு காயம் வலது முன் கையில் இருந்தது. அவருக்கு உடம்பில் வலி இருந்ததாகவும், அவருக்கு இருமல் இருந்ததாகவும் கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்தும், அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த சுந்தரபாண்டிக்கு வழங்கிய காயசான்று அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

அவருடன் சேர்ந்து 19 வயதுள் முருகன் என்பவரும் சிகிச்சைக்காக அழைத்து வரபட்டார். அவருக்கு இரண்டு சிறிய வெட்டுகாயங்கள் வலது முன் கையில் இருந்தது. அவருக்கு இடது தோள் பட்டையில் சிராய்ப்புடன் கூடிய வீக்க காயம் இருந்தது. அவர் தன்னால் இடது தோள்பட்டையை தூக்க முடியவில்லை என்று கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்தும், அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த முருகனுக்கு வழங்கிய காயசான்று அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

அவருடன் 19 வயதுள்ள தினேஷ் குமார் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிறிய வெட்டுக்காயம் வலது முன்கையில் இருந்தது. மற்றொரு வெட்டுக்காயம் இடது முன் கையில் இருந்தது. சிராய்ப்புடன் கூடிய வீக்க காயம் வலது தோள்பட்டையில் இருந்தது. வலது கையை தூக்க முடியவில்லை என்று கூறினார், முதுகு வலி இருப்பதாகவும் கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்தும், அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த தினேஷ் குமார் வழங்கிய காயசான்று அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

அவர்களுடன் 21 வயதுள்ள கரிகாலன் என்பவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்ததில் பல சிறிய வெட்டுகாயங்கள் வலது, மற்றும் இடது கையில் இருந்தது. மற்றும் 3x0.5 செமீ வெட்டுகாயம் வலது மேற்கையிலும் 2 x 0.5 செமீ இடது முன் கையில் இருந்தது. அவருக்கு நெஞ்சில் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்தும், அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த கரிகாலன் வழங்கிய காயசான்று அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் என்னிடம் 5 நபர்கள் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன கரிகாலன் என்பவரின் தாயார் எங்கள் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்தார் என்றால் கரிகாலனின் தாயார் பெயரை சொன்னால் எனக்கு தெரிந்திருக்கும். பொதுவாக இதுபோன்ற வழக்குகளில் காயம்பட்ட நபரை விசாரித்து அதன்பின்னரே மருத்துவமனையில் அனுமதிப்போம் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்து எழுதி முடிக்க ஒரு நபருக்கு 10 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். இவ்வழக்கில் அனுமதிக்கப்பட்ட 5 காயம்பட்ட நபர்களையும் விசாரிக்க அனுமதியில் அனுமதிக்க சுமார் 45 நிமிடம் ஆகியிருக்கும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் காயம் ஏற்பட்டதாக 5 நபர்களை வரிசையாக அனுமதித்து, சிகிச்சை அளித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு

காயச்சான்றுகள் அனைத்திலும் அனுமதிக்கப்பட்ட 5 நபர்களும் காலை 11.15 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அனைவரையும் ஒரே சமயம் அழைத்து வந்ததனால் அவர்களை விசாரித்து விட்டு அழைத்து வந்ததை பதிவு செய்துள்ளேன். 5 நபர்களையும் ஒரே சமயத்தில் விசாரிக்க இயலாது என்றால் சரியல்ல, அவர்களுக்கு இருந்தது சாதாரண காயம் என்பதனால் அவர்களை விசாரித்து அழைத்து வந்த நேரத்தை குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் அந்த 5 நபர்களும் எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார்கள் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அழைத்து வந்த நபர் திரு.வினோத் என்று கூறியதனால் அதை குறிப்பிட்டுள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள காயச்சான்றுதழ் அடிப்படையில பிரதிவிராஜ்யை முதல் காயம்பட்ட நபராக பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான். ஆனால் அவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பிரதிவிராஜ் தவிர மற்ற எந்த நபரும் சம்பவத்தை குறித்து சொன்னதாக காயச்சான்றிதழ்லில் குறிப்பு இல்லை என்றால் சரியல்ல, பிரதிவிராஜ்யை தொடர்ந்து அனுமதித்து நபர்களும் அதே சம்பவத்தில் காயம்பட்டதாக சொன்னதனால் அதே சம்பவம் என்று குறிப்பிட்டுள்ளேன். அதே சம்பவம் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது, யார் சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் காயம்பட்ட நபர்கள்தான் சம்பவத்தை குறித்து என்னிடம் சொன்னார்கள். அதேபோல் காயம்பட்ட 5 நபர்களும் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது மயக்கநிலையில் இருந்தார்களா, நல்ல நிலையில் இருந்தார்களா என்றால் நல்ல நிலையில்தான் இருந்தார்கள். பிரதிவிராஜ் எனது விசாரணையில் 12 அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கிதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் ஆயுதம்

பயன்படுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, கத்தி, கம்பு கொண்டு தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. அருவாள் கொண்டு தாக்கியதாக சொல்லப்படவில்லை என்றால் கத்தி, கம்பு கொண்டு தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட 5 நபர்களுக்கும் முன் கைகளிலே காயம் இருப்பதாகவும், ஒரே மாதிரியான காயம் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் முன்னங்கையில் காயம் இருப்பதாகவும், சிறிய வெட்டுகாயம் இருப்பதாகவும் காயச்சான்று கொடுத்துள்ளான்.

3) பொதுவாக காயம்பட்ட நபர் உடல் வலி இருப்பதாக பாசாங்க கூட சொல்வார்கள் என்றால் சரிதான், ஆனால் காயம் இருக்கும் இடத்தில் வலி இருக்கும் என்று சொல்வது பாசாங்காக எனக்கு தெரியவில்லை. மேற்கூறிய 5 நபர்களையும் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கேயே சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட 5 நபர்களுக்கும் நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சிறுகாயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய 5 நபர்களும் ஒரே தேதியான 12.02.2005 லிருந்து 21.02.2005 ம் தேதி வரை மருத்துவமனையிலிருந்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள அசாஆ 2 லும், மற்றும் அசாஆ 3 சுந்தரபாண்டியனையும், முருகனையும் மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர்களே மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பவில்லை. நான் சொன்னதுபோல் 5 நபர்களை ஒரே சமயத்தில் விசாரணை செய்து, அந்த விவரங்களை குறித்து, ஒரே சமயத்தில் அனுமதிக்க இயலாது, கரிகாலனின் தாயார் மருத்துவமனையில் பணியாற்றியதனால் அவர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க மருத்துவமனையில் சேர்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.